**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 188/2024**

**நாள்: 22.09.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 11 (LW9)

2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரண்ராஜ் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( எதிரி ஆஜர் )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது சோலந்துார் குரூப் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவ காலத்தில் அதே குரூப்பில் கிராம உதவியாளராக பணிபுரிந்து வந்தேன். சாட்சி பாலு என்பவரை எனக்குத் தெரியும். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். கடந்த 19.11.2023ம் தேதி மாலை 04.15 மணியளவில் சோழந்துார் ராஜுவ் காந்தி பஸ் ஸ்டாப் அருகே நானும் சாட்சி பாலுவும் பேசிக்கொண்டிருந்த போது, திருப்பாலைக்குடி போலிசார் அங்கு வந்து,



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.22 16:01:39 +0530

அந்த பஸ் ஸ்டாப்பில் நின்றுகொண்டிருந்த ஆஜர் எதிரி சுமதியை விசாரித்தார்கள். அப்போது அவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் பயன்படுத்திய ஆணி பிடுங்கும் இரும்பு கம்பி, இரத்தம் படிந்த சிவப்புக்கலர் நைட்டியையும் மறைத்து வைத்திருப்பதாகவும், தன்னுடன் வந்தால் மறைத்து வைத்திருந்த இடத்தில் இருந்து அதை எடுத்துக்கொடுப்பதாக சொன்னார். அதை காவல் ஆய்வாளர் பதிவு செய்தார். அந்த **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.9** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி போலிசார் எதிரியை வாகைவயல் கிராமத்தில் உள்ள எதிரியின் வீட்டிற்கு அழைத்துச்சென்று, பயன்படுத்தப்படாத சமையல் அறையில் உள்ளிருந்து ஆணி பிடுங்கும் இரும்பு கம்பி மற்றும் சிகப்புக்கலர் நைட்டி ஆகியவற்றை ஆஜர் எதிரி எடுத்துக்கொடுத்ததை அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். நானும் பாலுவும் உடன் சென்றோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் நானும் பாலுவும் கையொப்பம் செய்தோம். நான் கையொப்பம் செய்த **அத்தாட்சி அ.த.சா.ஆ.10** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் **ஆணி பிடுங்கும் இரும்பு கம்பி மற்றும் சிகப்புக்கலர் நைட்டிதான்** போலிசார் கைப்பற்றியதாகும். அவை ஏற்கனவே **சா.பொ.1 மற்றும் சா.பொ.2** ஆக முறையே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தாக்ள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் எதிரியை கைது செய்து, எல்லாம் முடித்து காவல் நிலையம் அழைத்து சென்று அங்கு வைத்து ஆவணங்கள் டைப் செய்து, கையொப்பம் வாங்கினார்கள் என்றால் இல்லை, மடிக்கணினியில் அந்த இடத்திலேயே டைப்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.22 16:01:44 +0530

செய்து, பின்னர் காவல் நிலையத்திற்கு சென்று பிரிண்ட் அவுட் எடுத்தார்கள். நானும் அங்கு சென்றுதான் கையொப்பம் செய்து கொடுத்தேன். எதிரியை கைது செய்யவேண்டும் என்று சொல்லி சோழந்துார் ராஜீவ் காந்தி நகர் பஸ் ஸ்டாப்பிற்கு வரச்சொல்லி நான் அங்கு சென்றேனா என்றால் இல்லை, நான் அங்கேதான் இருந்தேன். சோழந்துார் பஸ் ஸ்டாப்பில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் மாலை 04.15 மணிக்கு அங்கு இருந்தேன். நான் நின்று கொண்டிருந்த போதுதான் போலிசார் அங்கு வந்தார்கள்.

என்னை போலிசார் விசாரித்த போது, நான் வாசுகி என்பவரை கைது செய்து அவர் ஒரு வாக்குமூலம் கொடுத்தார் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அங்கு நின்றிருந்த போது போலிசார் சுமதியை அழைத்து வந்தார்கள். சுமதியை எங்கிருந்து எப்போது அழைத்து வந்தார்கள் என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். நான் பல வழக்குகளில், போலிசாருக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

நைட்டி மற்றும் கம்பி ஆகியவை சாதாரணமாக கடைகளில் கிடைக்கக்கூடியவை என்றால் சரிதான். நாங்கள் சென்ற வீடானது ஓட்டுவீடுதான். அந்த வீடு பூட்டி இருந்ததா என்றால் திறந்தே இருந்தது. அந்த வீட்டில் ஆட்கள் யாருமே இல்லை என்றால் சரிதான். அங்கு அக்கம்பக்கத்தில் வீடுகள் உள்ளன என்றால் சரிதான். நாங்கள் சென்ற போது அங்கிருந்த நபர்கள் என்ன ஏது என்று பார்க்க வந்தார்கள் என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் பொருட்கள் உள்ளே இருப்பதாகவும், அவற்றை எடுக்கப்போவதாகவும் எல்லோரிடமும் சொன்னார் என்றால் எல்லோரும் நின்று கொண்டிருந்தார்கள், ஆஜர் எதிரி உள்ளே சென்று எடுத்துக்கொண்டுவந்து கொடுத்தார். நான் உள்ளே போகவில்லை வெளியே நின்று கொண்டிருந்தேன். அந்த வீட்டில் எத்தனை அறைகள் உள்ளன என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான்.



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.22 16:01:48 +0530

சமையற்கட்டு எங்கு இருந்தது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான்.

நான் சொன்னது போன்று சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எங்கும் செல்லவில்லை என்றாலும், எதிரியை என் முன்னிலையில் கைது செய்யவில்லை என்றாலும், எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் என்னை எங்கும் கூட்டிச்செல்லவில்லை என்றாலும், எந்த பொருளையும் எதிரி என் முன்னிலையில் எடுத்துக்கொடுக்கவில்லை என்றாலும், நான் கையொப்பம் இட்ட ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றாலும் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, இருப்பு சாட்சியாக இருந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.22 16:01:53 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .